Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 28/2026**

வழக்கு சாட்சி எண். PW3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | புஷ்பாகரன் | கிராமம் | : | அரூர் |
| தந்தை பெயர் | : | தேவராஜ் | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 46 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07nd Day of July 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது அரூர் மதுவிலக்கு அமல்பிரிவில் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 04.11.2025ம் தேதி மதியம் 02.00 மணிளவில் நான் எனது தலைமையில் என்னுடன் அசா 1 மற்றும் 2 ஆகியோருடன் மது விலக்கு குற்ற தடுப்பு சம்பந்தமாக அரூர் காவல் நிலைய எல்லைக்குட்ப்பட்ட இந்திராநகர் கிராமம் அருகே கண்காணித்து கொண்டு இருந்த போது ஆஜர் எதிரி லட்சுமி சில்லரை விற்பனைக்காக மதுபாட்டில் மூடிகளை திறந்து வைத்து இருந்தார், போலீசார் ஆகிய எங்களை கண்டதும் தப்பியோட முயன்றார். அவரைப் பிடித்து சோதனை செய்த போது அவர் வைத்து இருந்த பையில் 26 black pearl பிராண்டி பாட்டில்கள் 180ml அளவு வைத்திருந்தார். எதிரியிடம் அதைப்பற்றி கேட்ட போது எதிரி அருகில் உள்ள அரசு

மதுபானக்கடையில் மொத்தமாக வாங்கி அதிக விலைக்கு விற்பதற்காக வைத்திருப்பதாக கூறினார். உடனே எதிரியை நான் அந்த இடத்திலேயே கைது செய்தேன். தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் என்னுடன் வந்த காவலர்கள் அசா-1 மற்றும் 2 ஆகியோர் முன்னிலையில் எதிரியிடம் இருந்து 180ml அளவு கொண்ட 26 மதுப்பாட்டில்களை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசரில் என்னுடன் வந்த காவலர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன்.

இன்று என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசர் நான் தயார் செய்தது தான். **கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அசாஆ 1ஆக குறியீடு செய்யப்படுள்ளது.**

பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது அரூர் மது விலக்கு காவல் நிலைய குற்ற எண் 451/2025சட்ட பிரிவுகள் 4(1)(C) TNP Act படி முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசா ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே எதிரியை நிலைய பிணையில் விடுவித்தேன்.

பின்பு கைபற்றபட்ட சொத்துக்களை தருமபுரி மாவட்ட உதவி ஆணையாளர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அவர்களுக்கு கைப்பற்றிய மதுபாட்டில்களை அழிப்பதற்காக வேண்டுகொள் கடிதம் கொடுத்தோம். மேற்படி சொத்துக்கள் நிலைய இருப்பில் வைக்கப்பட்டது.

மேற்படி வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசலை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டேன்.

சாட்சிகள் 1,2 தனிதனியாக விசாரணை செய்து வாக்கு மூலம் பதிவு செய்தேன்.

தருமபுரி மாவட்ட மதுவிலக்கு ஆயத்துறை உதவி ஆணையாளர் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட 12.12.2025ம் தேதியிட்ட உத்தரவின் வரிசை எண் 96ல் கண்டுள்ளவாறு டாஸ்மாக் ஊழியர்கள் மற்றும் உதவி ஆணையாளர் மதுவிலக்கு அவர்கள் முன்னிலையில் கொட்டி அழிக்கப்பட்டது. **12.12.2025 ம் தேதியிட்ட உதவி ஆணையர் அவர்கள் பிறப்பித்த உத்தரவின் சான்றிட்ட நகல் அசாஆ-3 ஆக குறியீடுசெய்யப்படுறது.**

அத்துடன் எனது புலன் விசாரணை முடித்து 04.11.2025ம் தேதி எதிரி லட்சுமி என்பவருக்கு எதிராக சட்ட பிரிவுகள் 4(1) (C) TNP Act படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புகார்தாரரும் புலன் விசாரணை அதிகாரியும் நான் தான் என்றால் சரிதான். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை 04.11.2025ம் தேதியன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் ஆனால் அது 06.03.2026ம் தேதியன்று தான் இறுதி அறிக்கையோடு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.இந்த வழக்கு சம்பவத்தின் போது தனிநபர்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. எதிரி தப்பியோட முற்பட்டார் முற்பட்டார் ஆனால் தப்பியோட வில்லை அவரை அசா-2 பிடித்தார். இந்த வழக்கின் கைப்பற்றுதல் மகசரை தவிர மாதிரி வரைபடமோ பார்ரை மகசரோ தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் ஏதும் பெறவில்லை என்றால் சரிதான்.

நான் சொல்வது போல் ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும், அவ்வாறு நடந்து

இருந்தால் பொது மக்களையும் சாட்சிளாக சேர்த்திருப்போம் என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக சரிவர புலன் விசாரணை செய்யாமல்  இந்த வழக்கை எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அளூர்.**